**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 20 /2025 PW . 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரகாஷ் | தந்தை/கணவர் பெயர்: அழகர் சாமி | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>12.02.2026 முதல் விசாரணை</u>:**

1. நான் படையேந்தி பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . JCB ஓட்டுனாராக வேலை செய்கிறேன். நான் ஓட்டுனாராக இருந்த இடத்தில் அ.சா.2 அஜீத் ஓட்டுனாராக வேலை செய்தார். எதிரிகளை தெரியும். அஜீத் நண்பர்கள் என்பதால் எனக்கு தெரியும் . சுமார் 1 வருடத்திற்கு முன்பு 1 நாள் தேதி , மாதம் ஞாபகமில்லை . இரவு 08.00 மணியளவில் அஜீத் –க்கும், எதிரி சூர்யாவிற்கும் வாய் தகராறு என்று போன் வந்தது.

2. நானும், குமாரும் சென்று எதிரி சூர்யா வீட்டு வாசலில் வைத்து சண்டையை விலக்கிவிட்டு அஜீத்–தை அழைத்து வந்தோம். நான் வேலை பார்க்கும் மணப்பட்டியில் எனக்கு ஒரு ரூம் உள்ளது . அஜீத்தை அங்கு அழைத்து சென்றோம் . பின்னால் வந்த எதிரி சூர்யாவை நாங்கள் கவனிக்கவில்லை . ஏதோ அடிக்க வந்தான் என்று நினைத்தோம். ஆனால் கத்தியால் அஜீத் முதுகில் குத்தி விட்டார் . அதனால் அந்த பையன் தடுமாறி முட்புதரில் விழுந்து விட்டான் . எங்களுக்கு பயமாக இருந்நதால் நானும், குமாரும் சிங்கம்புணரி காவல்நிலையத்தில் உதவி கேட்டோம் . போலீஸ் வந்து அஜீத்தை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல உதவி செய்தார்கள். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. நான் முதல் விசாரைணையில் சொன்ன சங்கதிகளை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீஸ் விசாரணையில் நானும், குமாரும் SK தொட்டியில் குளித்து கொண்டிருந்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன் . சம்பவத்திற்கு முன்பு குளித்து கொண்டிருந்தோம் . நான் சாட்சியம் அளித்ததற்கும் , போலீஸ் கொடுத்த

வாக்குமூலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல . குமார் எனது நண்பர் என்பதால் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.